LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

B.A. DEGREE EXAMINATION – **TAMIL**

SIXTH SEMESTER – **APRIL 2023**

UTL 6503 – SPECIAL LITERATURE - THIRUKKURAL

Date: 05-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

பகுதி – அ

எல்லா வினாக்களுக்கும் இருபது சொற்களில் விடையளிக்க. *(10x2=20)*

01. திருக்குறளுக்கு வழங்கப்பெறும் சிறப்புப் பெயர்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.
02. 'திருவள்ளுவமாலை' நூல் குறிப்பு தருக.
03. திருக்குறளை மொழிபெயர்த்த எவரேனும் இருவர் பெயரைச் சுட்டுக.
04. திருக்குறளுக்கு உரையெழுதிய பதின்மருள் இருவரைச் சுட்டுக.
05. வானம் மழை பெய்யாவிட்டால் நடைபெறாமல் போகும் அறங்கள் எவை?
06. யாருடைய வாழ்க்கை, வறுமையிலும் துன்புற்றுக் கெடுவதில்லை?
07. 'வினைத்திட்பம்' என்பது எது?
08. நற்குணத்தை மதிப்பிடும் உரைகல் எது?
09. துன்பத்திற்குத் துணை ஆவது எது?
10. "நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது" – விளக்குக.

பகுதி – ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க. *(5x7=35)*

11. 'திருக்குறள் அற இலக்கியங்களில் தலைசிறந்தது' - எங்ஙனம்?
12. பரிமேலழகர் உரையின் சிறப்புகள் சிலவற்றைத் தொகுத்தெழுதுக.
13. 'மக்கட்பேறு' அதிகாரம் உணர்த்தும் செய்திகளைப் புலப்படுத்துக.
14. 'ஊழ்' பற்றித் திருக்குறள் உரைக்கும் செய்திகளை எடுத்துரைக்க.
15. கேள்விச் செல்வம் குறித்து திருவள்ளுவர் கூறும் கருத்துகளைப் புலப்படுத்துக.
16. நல்ல ஆட்சி முறையினைச் செங்கோன்மையின் வழி விளக்குக.
17. மாலைப் பொழுதைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் திருக்குறள் கொண்டு விளக்குக.

பகுதி – இ

மூன்று பக்க அளவில் விடையளி. *(3x15=45)*

18. 'தமிழில் அற இலக்கியங்கள்' எனும் தலைப்பினில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

'திருவள்ளுவமாலை' கூறும் திருக்குறளின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

19. உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புக் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

தமிழர்தம் உயர்பண்புகளை 'விருந்தோம்பல்', 'ஈகை' அதிகாரங்கள் வழிநின்று விளக்குக.

20. கல்வி, அறிவுடைமை அதிகாரங்களில் திருவள்ளுவர் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

தமிழர் அகவாழ்க்கை நெறிகளைத் திருக்குறள் வழி ஆராய்க.

&&&&&&&&&&